ஆதிதிராவிடர் நல இயக்குநர் அவர்களின் செயல்முறைகள், சென்னை-5.

முன்னிலை: திரு.த.ஆனந்த்.,இ.ஆ.ப.,

ந.க.எண். இ6/17264/2018 நாள்.24.01.2024.

பொருள்: பணியாளர் தொகுதி – ஆதிதிராவிடர் நலம் – செங்கல்பட்டு மாவட்டம் – இரும்பேடு - அரசு ஆதிந மேல்நிலைப்பள்ளியில் பணியில் சேர்ந்து – இளநிலை உதவியாளர் – திரு க.ரஞ்சித்குமார் என்பவரது பணிவரன்முறை செய்து ஆணையிடுதல் - சார்பு

பார்வை:
1. ஆதிதிராவிடர் நல இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.இ5/19837/2023-2, நாள். 14.09.2023.
2. அரசாணை நிலை எண்.33, பணியாளர் நலம் மற்றும் திறன் மேம்பாட்டு (Q1) துறை நாள். 08.03.2023
3. தொடர்புடைய ஆவணங்கள்.

******

**ஆணை:**

சென்னை மாவட்டம், மீனம்பாக்கம், அரசு ஆதிதிராவிடர் நல மேல்நிலைப்பள்ளியில் அலுவலக உதவியாளராகப் பணிபுரிந்து பணியிடையே 06.11.2005 அன்று காலமான திரு C.P.கணேசன் என்வரது மகன் திரு.க.ரஞ்சித்குமார் என்பவருக்கு பார்வை 1-இல் காணும் செயல்முறைகளின்படி கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கப்பட்டு செங்கல்பட்டு மாவட்டம், இரும்பேடு, அரசு ஆதிந மேல்நிலைப்பள்ளியில் இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்து 20.09.2023 முற்பகல் முதல் பணியில் சேர்ந்து பணிபுரிந்து வருகிறார்.

இந்நிலையில், பார்வை 2-ல் காணும் அரசாணையில் கருணை அடிப்படையில் பணிநியமனம் பெற்ற பணியாளர்களின் பணியினை வரன்முறை செய்வது தொடர்பாக எந்த வித விதி தளர்வும் தேவையில்லை எனில் பணி நியமன அதிகாரியே சம்மந்தப்பட்டவர்களின் பணியினை வரன்முறை செய்து ஆணையிடலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நேர்வில் ஆதிதிராவிடர் நலத்துறையில் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணிநியமனம் வழங்கப்பட்டு செங்கல்பட்டு மாவட்டம், இரும்பேடு, அரசு ஆதிந மேல்நிலைப்பள்ளியில் இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்து 20.09.2023 முற்பகல் முதல் பணிபுரிந்து வரும் திரு.க.ரஞ்சித்குமார் என்பவர் அப்பணியிடத்திற்கான உடற்தகுதியைப்

Scanned with ACE Scanner

பெற்றிருக்க வேண்டும் எனும் நிபந்தனைக்குட்பட்டு, அன்னாரது பணியினை அவர் பணியேற்ற நாளான 20.09.2023 முற்பகல் முதல் வரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது. இவ்வாறு வரன்முறை செய்யப்படுவதால் திரு.கரஞ்சித்குமார் இளநிலை உதவியாளர் என்பவர் ஆண்டு ஊதிய உயர்வு பெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

ஓம்/- த.ஆனந்த்,

ஆதிதிராவிடர் நல இயக்குநர்.

24/1/24

ஆதிதிராவிடர் நல இயக்குநருக்காக.

3/5

பெறுநர்:

திரு.க.ரஞ்சித்குமார்,

இளநிலை உதவியாளர்

அரசு ஆதிந மேல்நிலைப்பள்ளி,

இரும்பேடு, செங்கல்பட்டு மாவட்டம்.

நகல்.

1. அரசு செயலாளர்,
   ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை,
   தலைமைச்செயலகம், சென்னை – 9.
2. தலைமையாசிரியர்,
   அரசு ஆதிந மேல்நிலைப்பள்ளி,
   இரும்பேடு,
   செங்கல்பட்டு மாவட்டம் - 603 302.
3. “இ5” இருக்கை.
4. முக்கிய ஆணைத் தொகுப்பு.

Scanned with ACE Scanner